**அலவ்வ பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரிதீகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள நிதிக்கூற்றுக்களின் மூலம் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 10,000 மற்றும் ரூபா 40,000 தொகையான முறையான எரமினயாவல்கல வத்த மற்றும் மஹாரச்சிமுல்ல கந்தேகெதர காணிகளின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 535,000 பெறுமதியான நீர் பவுசர் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 சுவர் மின்விசிறிகளின் பெறுமதி ரூபா 19,500 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஈ) ரூபா 9,180 பெறுமதியான வீதி ரேகை சான்றிதழ் புத்தகங்களின் பெறுமதி ரூபா 259,200 என ரூபா 250,020 தொகை கூடுதலாக கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்கு உரிய ரூபா 29,530 பெறுமதியான ஒப்பந்த வைப்பு ஒன்று கணக்குகளில் விடுபட்டிருந்தது.

(ஊ) சபையின் நிரந்தர பதவியணிக்காக மீள்நிரப்ப வேண்டிய ரூபா 192,240 தொகையான நிலுவை சம்பளம் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதத்திற்குரிய ரூபா 126,043 தொகையான வியாபார நிலைய வாடகை ரூபா 98,770 என ரூபா 27,273 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் உரிய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காணப்பட்ட மீதிகளுக்கு இடையே ரூபா 1,127,598 ஆன வேறுபாடுகள் காணப்பட்டன.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 31,221,658 தொகையான பெறவேண்டிய கணக்குகளில் ரூபா 1,175,297 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக ப்பகுதியில் இருந்து அறவிடப்படாது காணப்பட்டன.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 27,197,966 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்து தீர்வு செய்யப்படாமல் காணப்பட்ட மீதி ரூபா 9,596,714 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 53,549,684 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 180 | - | சபைக்குரிய மஹரச்சிமுல்ல மற்றும் கெப்பிட்டிவலான உப அலுவலகங்கள் இரண்டின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரிடமிருந்து பிணைத் தொகை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 570 | - | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங் கடந்த 53 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,599,669 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,623,593 ஆக காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

கெப்படிவலான உப அலுவலகத்தின் நாளாந்த பணத்தை வங்கியிலிடுதல் கூடுதலாக வீதித் தொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் வீதி தொழிலாளர்களினால் 51 சந்தர்ப்பங்களின் போது ரூபா 724,252 ஆன பணம் அலவ்வ இலங்கை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 ஆண்டு | | | | 2016 ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | வீதவரி மற்றும் வரி | 2,946 | 3,461 | 3,744 | 920 | 2,786 | 2,648 | 2,846 | 1,204 |
| ii | வாடகை | 10,996 | 9,794 | 9,655 | 190 | 8,662 | 10,668 | 10,641 | 40 |
| iii | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,502 | 1,917 | 1,963 | - | 1,409 | 1,712 | 1,712 | - |
| iv | ஏனைய வருமானம் | 71,131 | 66,507 | 71,975 | 17,631 | 71,679 | 74,266 | 74,266 | 12,270 |
| | மொத்தம் | 86,575 | 81,679 | 87,337 | 18,741 | 84,536 | 89,294 | 89,465 | 13,514 |

**குறிப்பு**

2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டிற்குரியதாக ரூபா 785,271 ஆன நிலுவை அறவீடும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானமான ரூபா 82 மில்லியனும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 87 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுகளில் நிலுவைகளுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 18 மில்லியன் மேலும் அறவிட வேண்டியிருந்தது.

**2.3.3 வீதவரி மற்றும் வரி**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி மற்றும் ஏக்கர் வரி ரூபா 920,786 ஆக இருந்தது.

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 4,518,250 மற்றும் ரூபா 13,000,000 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களாக அறவிடப்பட வேண்டியிருந்தன

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பிரதான மற்றும் உப விடயங்கள் தொடர்பாக மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட பொது உப விதிகள் 54 பின்பற்றப்பட்டிருந்தன.

**(ஆ) நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமை**

மீளாய்வாண்டில் பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த 05 நிர்மாண வெுலைகள் ரூபா 3,263,172 செலவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தினை அடையாமை**

2014 ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அளவ்வ நகர மண்டத்தின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் மூலம் சபைக்கு கிடைப்பதற்கு இருந்த வருமானம் இல்லாமல் போனமை, பொதுமக்கள் சேவை கிடைக்காமை மற்றும் வளங்கள் வீணாகுதல் இடம்பெற்றிருந்தது.

**(ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி 2017 ஆம் ஆண்டில் 18,912 சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 12,311,210 செலவடப்பட்டிருந்தது.

**(உ) சுற்றாடல் சிக்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு பயன்பாடு ஆரம்பிக்கப்பட்டிருந்த அளவ்வ பேரூந்து நிலையத்தின் பொது மலசலகூடத்தின் கலி குழிகள் போதியதாக இல்லாமையால் வழந்தோடும் சந்தர்ப்பங்களில் அது முழு நகரையும் பாதகமான வகையில் தாக்கமளித்திருந்தது.

(ஆ) வடமேல் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 148.05 மீற்றர் நீளமாக அச்சுக்கல் பதித்து அபிவிருத்தி செய்யப்பட்ட அளவ்வ தெற்கு ஜனரஜ மாவத்தையின் 03 ஆம் குறுக்கு வீதியில் நீர் வழிந்தோடுவதற்காக வீதியின் இரு பக்கங்களிலும் வடிகாண் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய பீடீ/சீபீபீ/4/1/2-2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் பாதீட்டு மதிப்பீடொன்று தயாரிக்கும் போது அச்சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கொள்கை தந்திரோபாயத்தை அடிப்படையாக கொண்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அளவ்வ பேரூந்து நிலையத்திற்கு அருகில் 04 மீன் கடைகளுக்காக நீர் மற்றும் மின்சார இணைப்பு 2018 பெப்ரவரி மாதம் வரையில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அளவ்வ பேரூந்து நிலையத்திற்கு அருகில் 28 கடைகளுக்காக நீர் மற்றும் மின்சார இணைப்பு 2018 மே மாதம் வரையில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் இவ்வியாபார நிலையங்களைப் பெற்றுக்கொண்ட வியாபாரிகள் மிகவும் சிக்கல்களை எதிர்நோக்கயிருந்தனர்.

(ஆ) வழங்கல் மற்றும் சேவைகள் முறைப்படி நிர்மாணிக்கப்படாதிருக்கையில் 2017 நவம்பர் 21 மற்றும் 2017 திசெம்பர் 27 ஆம் திகதிகளில் ரூபா 264,321 பெறுமதியான 02 காசோலைகள் தயாரிக்கப்பட்டு 2018 சனவரி 30 ஆந் திகதி வரையிலும் விடயத்திற்குப் பொறுப்பான எழுதுனரின் பொறுப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்

இரண்டாம் மட்டத்திற்குரிய 07 பதவிகளில் 15 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தின் 02 பதவிகளுக்குரிய 02 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தினால் இணைக்கப்பட்டிருந்த 15 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்பட்டனர். 04 பதவிகளுக்குரியதாக மேலதிகமாக 15 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 04 பதவிகளுகுரியதாக 08 அமைய ஊழியர்கள் மிகையாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

### (ஆ) ஊழியர் கடன்

ஓய்வுபெற்றமை, மரணித்தமை மற்றும் இடமாற்றம் பெற்றுசென்றதன் பேரில் அறவிடப்படாத கடன் மீதி ரூபா 23,613 ஆக இருந்தது.

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

கெப்பிட்டிவலான நகரில் பொது சந்தையின் 14 கடைகள் மற்றும் 07 தற்காலிக கடைகளில் தற்போது 02 கடைகளில் மாத்திரம் தற்போது வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஏனைய கடை உரிமையாளர்களினால் வருடாந்த குத்தகை பணத்தை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் குத்தகை வாடகை ரூபா 450 மற்றும் ரூபா 650 இற்கு இடைப்பட்டிருந்ததுடன் மிகவும் குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது. அடிப்படை வசதிகள்கூட இவ்வியாபார நிலையங்களில் காணப்படாதததன் பேரில் குத்தகையாளர்கள் வியாபார நிலையங்களை பேணிச்செல்வதில் அக்கரை குறைந்திருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்

2014 ஆம் ஆண்டில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சிற்குக் கிடைத்திருந்த ரூபா 6,390,000 பெறுமதியான இரட்டை கெப் வண்டியை சபைக்குப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 3.5.2 பயன்படுத்தப்படாத / குறை பயன்பாட்டிற்குரிய சொத்துக்கள்

கெப்பிடிவலான உப காரியாலயம் மற்றும் வாசிகசாலை என்பனவற்றிற்கு அண்மையில் 02 ஏக்கர் பருமனுடைய காணி எவ்வித பிரயோசனமான நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகை திட்டம்

சபையினால் பெறுகை வழிகாட்டல் கோவை - 2006 இன் 4.2.1 (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை வழிகாட்டல் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 வழங்கல் மற்றும் சேவைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.1.1 (அ) இன் பிரகாரம் கேள்வி கோரல் பதிவேடு தபாலில் அல்லது தனிப்பட்ட வகையில் கேள்விதாரருக்கு பெற்றுக் கொள்வதற்கு 6.3.1 இன் பிரகாரம் கேள்வி வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,489,094 தொகையான 32 கொள்வனவுச் சந்தர்ப்பங்களுக்காக கேள்வி கோரல் பதிவேடு வழங்கல் உட்பட சபை உத்தியோகத்தர்களால் வெளிக்களத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சந்தை ஒப்பீட்டு முறைமையின் கீழ் கொள்வனவு செய்யும் போது 3.4.3(இ) இன் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் பதிவு செய்யப்பட்ட பட்டியலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் 37 சந்தர்ப்பங்களில் ரூபா 1,590,304 ஆன கொள்வனவு சபையின் பதிவுசெய்யப்படாத நிறுவனங்களினால் மேற்கெள்ளப்பட்டிருந்தது.

(இ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.2 (அ) இன் பிரகாரம் சந்தை ஒப்பீட்டு கோரலுக்கான விண்ணப்பங்களில் பொருட்கள் தொடர்பான விபரங்கள், தேயையான அளவு, உத்தரவாத காலம், கூறுவிலைகளில் செல்லுபடிக் காலம், பொருட் போக்குவரத்து செய்யப்படுகின்றதா மற்றும் சமர்ப்பிக்கப்படுகின்றன கூறுவிலைகளில் வரி உள்ளடக்கப்பட்டுள்ளதா என்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொரமடல – கொஸ்கந்த நீர் செயற்திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கிணற்றின் இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் ரூபா 68,434 ஆன கொடுப்பனவொன்று செய்யப்பட்டிருந்த கொங்கிரீட் கவர் சிலப் பகுதி 2018 பெப்ரவரி 19 ஆந் திகதி வரை நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.9.1 (அ) இன் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் வங்கப்பட வேண்டிய மொத்த ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 02 மில்லியனை விஞ்சக் கூடாத போதிலும் ஒரு கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு ரூபா 3,446,428 தொகையான 02 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 02 ஆண்டுகளுக்கு முன்னர் சங்கமொன்றாக பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் குறித்த சங்கம் 2016 யூன் 16 ஆந் திகதி வீதி அமைச்சின் கிராம அபிவிருத்தி பிரிவில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(இ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.7.1 (அ) பிரிவின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் வேலைகளை நிறைவேற்றுவது தொடர்பாக சங்கத்தின் இயலளவு தொடர்பில் திருப்தியடைந்ததாக குறித்த ஆவணங்கள் சபையிடம் காணப்படவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,100,000 ஆன பாதீடு செய்யப்பட்ட மூன்று நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபையினால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு திட்டமொன்ற தயாரிக்கப்பட்டிருந்த போதும் நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உள்ளக கணக்காய்வு பிரிவின் கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு ஏனைய கடமைகளை கையளித்தமையால் உள்ளக கணக்காய்வின் செயற்பாடுகளை சுயாதீனமாக செயற்படுத்த முடியாதிருந்தது.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படாமை |
| (ஆ) | சொத்துக்கள் | i | பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை |
| | | ii. | கையளிக்காமை |
| | | iii. | பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை |
| (இ) | கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் | | பதிவேடுகள் பேணப்படாமை |
| (ஈ) | ஊழியர் முகாமைத்துவம் | | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமை |
| (உ) | செயற்திட்டங்கள்/ஒப்பந்தங்கள் | | போதியளவு மேற்பார்வை செய்யப்படாமை |